நாள் -11.10.2022.

**C.C. No**.28/2021

ம.சா. 1-உமாமகேஷ்வரி,  க/பெ. மருதாசலமூர்த்தி.

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act**, 1969 (**Central Act** 44 **of** 1969) **on the** 11**th day of October** 2022.

சாட்சி மனுவின் பேரில் அழைக்கப்பட்டு, மனு அனுமதிக்கப்பட்டதன் பேரில் இன்று குறுக்கு விசாரணைக்கு அனுமதி வழங்கப்பட்டது.

**குறுக்கு விசாரணை**

1. நான் கண்ணம்பாளையத்தில் குடியிருந்து வருகிறேன். வழகத்கு தாக்கல் செய்வதற்கு வழக்கறிஞருக்கு நான் தான் தகவல் கொடுத்தேன். எதிரி ரவியை எனக்கு 5 அல்லது 6 வருடங்களாக தெரியும். ரவி என்ன தொழில் செய்கிறார் என்று என்னுடைய கணவருக்கு தான் தெரியும். எதிரியினுடைய குடும்பத்தை பற்றி எனக்கு ஓரளவிற்கு தெரியும். அவருடைய குடும்ப உறுப்பினர்கள் மற்றும் அவருடைய வீடு எங்குள்ளது என்று எனக்கு தெரியாது.

2. என்னுடைய புகாரில் எதிரியை நன்றாக தெரியும் என்ன கூறியிருப்பது பொய்யா என்றால் பொய்யல்ல உண்மையாகும். எதிரிக்கு ரூ.10 லட்சம் நான் கடனாக கொடுத்தேன். நான் கடன் கொடுப்பதற்கு முன்னர் எதிரியினுடைய வசதி வாயப்புகளை பார்த்து கொடுத்தேனா என்றால் பார்த்து தான் கொடுத்தேன். அவருக்குள்ள வசதி வாய்ப்புகள் குறித்து என்னுடைய கணவருக்கு தான் தெரியும் எனக்கு தெரியாது.

3. வழக்கை பொறுத்த விபரங்கள் எனக்கு தெரியாது என்றால் அதிகளவு தெரியாது. 04.09.2020 ம் தேதியன்று எதிரிக்கு ரூ.10 லட்சம் ரொக்கமாக கொடுத்தேன். 20 ஆயிரத்திற்கு மேல் ரொக்கமாக பணம் பரிவர்த்தனை செய்வது வருமானவரி சட்டத்தின் படி குற்றம் என்றால் அது எனக்கு தெரியாது. மேற்படி தொகையை வங்கி கணக்கிலிருந்து எடுத்து கொடுத்தேன். எந்த தேதியில் வங்கியிலிருந்து பணத்தை எடுத்தேன் என்று எனக்கு ஞாபகம் இல்லை. என்னுடைய வீட்டில் வைத்து தான் பணத்தை கொடுத்தேன். மாலை சுமார் 5லிருந்து 6 மணியளவில் எதிரியிடம் நேரடியாக கொடுத்தேன். அப்பொழுது எங்களுடன் என்னுடைய கணவர் மட்டும் இருந்தார்.

4. ரூ.10 லட்சம் கொடுத்தற்கு ஆவணம் ஏதாவது பெற்றேனா என்றால் பெறவில்லை. நம்பிக்கையின் பெயரில் தான் கொடுத்தேன். நம்பிக்கையிம் பெயரில் எவ்வித ஆவணமும் இல்லாமல் எதிரிக்கு மேற்படி கடனை கொடுத்தேன் என்றால் சரிதான். வழக்கு காசோலை எவ்வாறு என் வசம் வந்தது என்றால் 04.09.2020 ம்

தேதியன்றே 30.10.2020 ம் தேதியிட்ட காசோலையை ரவி என்வசம் கொடுத்தார்.

5. எதிரினுடைய மாமனாரின் காடு எங்குள்ளது என்று எனக்கு தெரியாது. மேற்படி காட்டினை விற்பது குறித்து பேசுவதற்காக 04.09.2020 ம் தேதியன்று எதிரி எங்களுடைய வீட்டிற்கு வந்தபோது தான் என்னிடம் கடன் பெற்றார். எதிரியினுடைய மாமனார் அருணாச்சலம் அன்றைய தினம் வீட்டிற்கு வரவில்லை. எதிரி மட்டும் தான் எங்கள் வீட்டிற்கு வந்தார்.

6. ரமேஷ் என்பவர் எங்களுடைய வீட்டிற்கு எதிரில் வசித்து வருகிறார் அவர் வட்டி தொழில் செய்கிறாரா என்றால் அது எனக்கு தெரியாது. எனக்கும் ரமேசிற்கும் இடையே எவ்வித வரவு செலவும் கிடையாது. 2020-2021 ல் வருமானவரி கணக்கினை நான் தாக்கல் செய்துள்ளேன். மேற்படி கணக்கு தாக்கல் செய்வதற்கு நான் தான் விபரம் கொடுத்தேன் என்றால் சரிதான். அந்த சமயத்தில் என்னுடைய ஆண்டு வருமானம் எவ்வளவு என்றால் ரூ.15 லட்சத்திற்கு மேல் இருக்கும். வரி எவ்வளவு செலுத்தினேன் என்று ஞாபகம் இல்லை.

7.புகாரில் குறிப்பிட்டிருப்பது போன்று எவ்வித பரிவர்த்தனையும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. இல்லை என்று கூறஇயலாது. காசோலையை எதிரியே நிரப்பி கொடுத்தாரா என்றால் ஆமாம். அக்காசோலை 04.09.2020 ம் தேதியன்று தான் நிரப்பப்பட்டது என்றால் சரிதான். காசோலையில் உள்ள விபரங்கள் எழுதப்பட்ட பேனா மையிக்கும் எதிரியினுடைய கையொப்பம் போடப்பட்ட பேனா மையிக்கும் வேறுபாடு உள்ளதா என்றால் எனக்கு தெரியவில்லை.

8. நான் 10ம் வகுப்பு வரை படித்துள்ளேன். ஆங்கிலம் ஓளவிற்கு தெரியும். 17.11.2020 ம் தேதியன்று காசோலையை வங்கியில் வசூலுக்கு தாக்கல் செய்தேன். செல்லக்கரச்சலில் உள்ள பேங்க் ஆப் பரோடா வங்கியில் தாக்கல் செய்தேன். அக்காசோலையானது போதிய பணமில்லை என்று கூறி திருப்பபட்டு விட்டது. நான் அனுப்பிய வழக்கறிஞர் அ றிவிப்பு எதிரி பதில் அறிவிப்பு அனுப்பினார் என்றால் சரிதான். அப்பதில் அறிவிப்பில் குறிப்பிடபட்டுள்ள விபரங்கள் எனக்கு சரியாக ஞாபகம் இல்லை.

9. எதிரிக்கு கடனாக பணத்தை கொடுத்தேன். வட்டியில்லா கடனாக கொடுத்தேன். நான் உமா என்ற பெயரில் கோழிபண்ணை பராமரித்து வருகிறேன். அப்பண்ணை என்னுடையதாகும். பெதப்பம்பட்டியில் இருந்த என்னுடைய தோட்டம் விற்ற பணத்தை என்னுடைய வங்கி கணக்கில் போட்டு வைத்திருந்ததேன். அதை தான் எதிரிக்கு கொடுத்தேன். எனக்கும் ரவிக்கும் இடையே நான் கூறுவது பேர்ன்று வரவு செலவு எதும்

நடைபெறவில்லை என்றாலும் பொய்யாக இவ்வழக்கினை எதிரிக்கு எதிராக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

10. எதிரி எனக்கு எவ்வித காசோலையும் கொடுக்கவில்லை என்றாலும் நானாக எதிரியின் காசோலையை பயன்படுத்தி பொய்யாக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனக்கும் ரமேசிற்கும் இடையே வரவு செலவு இருப்பதால் ரமேசிற்கு உதவ வேண்டும் என்பதற்கா கஇிவ்வழக்கை நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. ரவி கணிணி நிறுவனம் ஒன்று நடத்தி வருகிறார் என்றாலும் அவருக்கு கீழாக 300 பேர் பணியாற்றிகிறார்கள் என்ற விபரம்எனக்கு தெரியயும் என்றால் எனக்கு தெரியாது. எதிரிக்கு எப்பொழுதும் பணத்தேவை இருந்தது கிடையாது என்றால் சரியல்ல. எதிரி என்ன படித்துள்ளார் என்றால் அது எனக்கு தெரியாது. அவர் அமெரிக்காவில் பிகெச்டி படித்துள்ளார் என்றால் அது எனக்கு தெரியாது.

11. எதிரியினுடைய மாமனார் திருப்பூரில் மிகவும் வசதியானவர் என்றால் அது எனக்கு தெரியும். அவருக்கு ஏகப்பட்ட சொத்துகள் உள்ளது என்றால் அது எனக்கு தெரியாது. வழக்கு தாக்கல் செய்துள்ளது நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.

<u>**மறுவிசாரணை:.**</u> இல்லை

G RUBANA
Digitally signed by G RUBANA
Date: 2022.10.11 17:20:26 +0530

**Signature of Witness** **நீதித்துறை நடுவர்**

**சூலூர்.**